---

**கமத்தொழில் அபிவிருத்தி நிதியம் - 2014**

---

கமத்தொழில் அபிவிருத்தி நிதியத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புகளை உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2000 இன் 46 ஆம் இலக்க கமத்தொழில் அபிவிருத்தி அதிகாரச் சட்டத்தின் 97(5) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மேற்படி நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நிமயங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 – 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந் நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின்

மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவுசெய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தினால் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உளளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கிறாரேயன்றி அதிகார சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்திற் கொள்ளவில்லை. முகாமைத்துவதத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு வழங்குகின்றன.

## 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

## 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கமத்தொழில் அபிவிருத்தி நிதியத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை அரசதுறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) நிதியத்தின் நிதி மீதிக்கும் திறைசேரி புத்தகங்களின் படியான நிதி மீதிக்குமிடையே 2008 ஆம் ஆண்டு தொடக்கம் இருந்துவரும் ரூபா 651,797 ஆன வேறுபாட்டை இனம்கண்டு சீராக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஜப்பானிய யென் நன்கொடை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்த உழவு இயந்திரம் தொடர்பாக அறவிடப்பட்ட தவணைப்பணம் மற்றும் இருசக்கர உழவு இயந்திரத்தின் இழுவைப்பெட்டிக் கடன்பட்டோர் கணக்குகளில் நிதிக்கூற்றுக்களில் மீதிகள் என்பவற்றில் காட்டப்பட்டுள்ள மீதிகள் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட பட்டியல்களுக்குமிடையே முறையே ரூபா 186,063 மற்றும் ரூபா 41,491 ஆகிய வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன.

## 2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 1995 ஆம் ஆண்டின் போது கமத்தொழிற்சேவை நிலையங்கள் மற்றும் விவசாய அமைப்புகளுக்கு வழங்கப்பட்டிருந்த உழவு இயந்திரம் இழுவைப் பெட்டிகள் தொடர்பாக 2014 திசெம்பர் 31 இல் அறவிடப்பட வேண்டிய நிலுவைத் தவணைப் பணம் ரூபா 6,236,066 ஆக இருந்ததுடன் அதனை அறவிடுவதற்கு தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2006 ஆம் ஆண்டிற்கு முன்னர் கண்டுபிடிக்கப்பட்டிருந்த ரூபா 450,000 ஆன இருப்புக் குறைவு தொடர்பாக அதற்குப் பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்களிடமிருந்து அந்த நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காமல் தொடர்ச்சியாக நிதிக்கூற்றுக்களில் அப்பெறுமதி இருப்புக் குறைவாக காட்டப்பட்டிருந்தது.

(இ) விசிறும் இயந்திரம் வழங்கப்பட்டதால் அறவிடப்பட்ட தவணைப் பணம் மற்றும் ‘‘புல்டோசர்’’ சேவையினால் பெறப்பட்ட பணங்கள் ரூபா 10,746,805 ஆகியன 2004 ஆம் ஆண்டு தொடக்கம் வைப்புக் கணக்கில் வைக்கப்பட்டிருந்த போதிலும் அப்பணத்தை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) கமத்தொழிற்சேவை நிலையங்கள் சார்பாக கொடுக்கப்பட்டிருந்த ரூபா 31,250 ஆன கணக்காய்வுக் கட்டணம் மற்றும் வனாத்தவில்லு இழைய நடுகை ஆய்வுகூடம் நிர்மாணித்தலுக்காக 2012 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்டிருந்த ரூபா 543,000 ஆன முற்பணம் என்பவற்றை அறவிடுதல் தொடர்பாக உறுதியான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.4 சட்டம், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

பின்வரும் சட்டம், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமைகள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

| சட்டம், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | |
| (i) நிதிப்பிரமாணம் 371(5) | மீளாய்வாண்டின் போது விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர்களுக்கு பயிசியளித்தல் தொடர்பாக 05 சந்தர்ப்பங்களில் செலுத்தப்பட்டிருந்த முற்பணத்தில் ரூபா 269,753 மற்றும் கிராமிய நீர்ப்பாசன நீர்த் தரம் பரிசீலித்தலுக்காக 2013 ஆம் ஆண்டில் 15 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்டிருந்த முற்பணத்தில் ரூபா 222,918 என்பன உரிய வேலைகளை முழுமையாகப் பூர்த்திசெய்வதற்குச் செலவிடாமல் கையிருப்பில் வைத்திருந்து மீளாய்வாண்டின் போது காசாகத் தீர்க்கப்பட்டிருந்தது. |
| (ii) நிதிப்பிரமாணம் 341 மற்றும் 342(1) | பொதுப் பற்றுச்சீட்டுப் புத்தகங்கள் மற்றும் ஏக்கர்வரிப் பற்றுச் சீட்டுப்புத்தகங்கள் தொடர்பாக அடியிதழ்சேர் புத்தகப் பதிவேடு முறையாகப் பேணப்படாததுடன் அப்புத்தகங்கள் பாதுகாப்பான காப்பகமொன்றில் |

| | | |
|---|---|---|
| | | வைக்கப்பட்டிருக்கவில்லையென்பதும் கமத்தொழிற் சேவை நிலையங்களின் தெரிவுச் செவ்வைகளின் போது அவதானிக்கப்பட்டது. |
| (ஆ) | 2006 திசெம்பர் 22 திகதியிட்ட PE/423 இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் 4(1)(இ) பிரிவு | அங்கீகரிக்கப்பட்ட பாதீட்டில் உள்ளடக்கப்படாத அச்சிடல் நடவடிக்கையொன்று தொடர்பில் மீளாய்வாண்டில் ரூபா 598,080 ஆன செலவு செய்யப்பட்டிருந்தது. |

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி, மீளாய்வாண்டின்போது நிதியத்தின் செயற்பாடுகளின் விளைவு ரூபா 15,096,452 ஆன மிகையாக இருந்ததுடன், இதற்கொப்பான முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 12,827,826 ஆக இருந்ததால் நிதி விளைவுகளில் ரூபா 2,268,626 ஆன அதிகரிப்பு காணப்பட்டிருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 முகாமைத்துவ வினைத்திறனின்மை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) ஜப்பானிய யென் நன்கொடை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் விவசாய அமைச்சினால் கடன் அடிப்படையில் வழங்கப்பட்ட உழவு இயந்திரம் மற்றும் நீரிறைக்கும் இயந்திரம் என்பவற்றுக்கான தவணைப்பணத்தை அறவிட்டு அமைச்சிற்கு தீர்ப்பனவு செய்தல் நிதியத்தின் பொறுப்பு எனினும், தவணைப் பணத்தை அறவிடல் மிகவும் மந்தமான நிலையில் இருந்ததுடன், 2014 திசெம்பர் 31 ஆம் திகதியில் நிலுவையான தவணைப் பணம் ரூபா 413,601,692 ஆக இருந்தது. இதனை உள்ளடக்கிய 12 மாவட்டங்களுக்கு வழங்கப்பட்ட 27 உழவு இயந்திரங்கள் தொடர்பாக தவணைப் பணம் எதுவும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வவுனியா மற்றும் அம்பாறை மாவட்டங்களின் விவசாயிகளுக்காக 2010 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்டிருந்த ரூபா 2,220,000 பெறுமதியான 74 நீரிறைக்கும் இயந்திரங்கள் தொடர்பாக அறவிடவேண்டிய ரூபா 1,561,120 தொடர்பாக மீளாய்வாண்டு இறுதிவரையிலும் எவ்வித தவணைப்பணமும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 4.2 குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

நிதியத்தால் ரூபா 8,227,329 செலவிட்டு நீரோட்டக் கைநூல், நீரோட்ட படத்தொகுப்பு மற்றும் 41,300 கிராமிய நீர்ப்பாசனக் கைநூல்கள் என்பன அச்சிடப்பட்டிருந்த போதிலும், அவற்றில் ரூபா 5,974,209 பெறுமதியான 36,582 பிரசுரங்கள் மீளாய்வாண்டின் இறுதியிலும் விநியோகிக்கப்படாமல் திணைக்களத்தின் நீர்முகாமைத்துவப் பிரிவில் இருந்தன. தேவை தொடர்பாக உரிய முன் ஆய்வு இன்றி இவ்வாறான பாரிய தொகையொன்று அச்சிடப்பட்டிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

## 5. கணக்களிதகைமையும் நல்லாளுகையும்

## 5.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டின்போது பாதிடப்பட்ட வருமானங்கள் மற்றும் செலவுகள், உள்ளவாறான வருமானங்கள் மற்றும் செலவுகள் என்பவற்றிடையே குறிப்பிடத்தக்க முரண்கள் அவதானிக்கப்பட்டதால் பாதீடு பயனுள்ள முகாமைக்கட்டுப்பாட்டுக் கருவியாக உபயோகிக்கப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது ஆணையாளர் நாயகத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புகளுக்கு தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(ஆ) சொத்துக்களின் முகாமைத்துவம்

(இ) வைப்புக் கணக்குகளைச் சீர்செய்தல்

(ஈ) கடன்களை அறவிடுதல்